6. நடைமுறைக் கேள்வி.

ஹவுஸ் சர்ஜன்கள் வேலை நிறுத்தம் பற்றி உறுப்பினர்கள் ஒத்து வைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கும்போது, அது குறித்து தகவலை அவைக்கு அறிவிக்காமல், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் செய்தித் தாள் நிருபர்களுக்கு தகவல் அளிக்க அழைத்திருப்பதாக கூறப்படுவது குறித்து :—

திரு. எ. சுப்பிரமணியம் : சார், பாயிண்ட் ஆப் ஆர்டர். நான் கேட்கும் பாயிண்ட் ஆப் ஆர்டர் இது சம்பந்தப்பட்டதல்ல. இங்கே, நம் முடைய தமிழ்நாட்டில் நடக்கிற ஹவுஸ் சர்ஜன் வேலை நிறுத்தம் சம்பந்த மாக ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறோம். நானும் மற்றும் பலரும் கொடுத்திருக்கிறோம். இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தைக் கொடுத்து 2, 3 நாட்களாகிவிட்டன. இப்போது சம்பந்தப்பட்ட அமைச்சர வர்கள் இல்லை. ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கு அமைச்சர் சட்டசபையில் விளக்கம் சொல்ல வேண்டும். ஆனால் இங்கு விளக்கம் சொல்லாமல், பத்திரிகை நிருபர்களிடம் இது பற்றி கருத்துச் சொல்வதற்காக அவர்களை அழைத்திருப்பதாகத் தகவல் வந்திருக்கிறது. ஒத்திவைப்புத் தீர்மானத் தைச் சட்ட சபையில் கொடுத்திருக்கிறோம் ; அதற்கு இங்கே விளக்கம் சொல்லாமல் பத்திரிகை நிருபர்களை அழைத்துப் பேசுவது முறைதானா ? அது இந்த சபைக்கு உரிய கௌரவத்தைக் காட்டுவதாக இருக்குமா ? என்று அறிய விரும்புகிறேன்.

நாங்கள் இதில் மிகுந்த அக்கறை கொண்டிருக்கிறோம். இது சம்பந்த மாக சட்டமன்ற உறுப்பினர்கள் கவலை கொண்டிருப்பதால் ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறோம். மன்றம் கூடும்போது, இந்த மன்றத் தில்தான் இதுபோன்ற தகவல்களைத் தர வேண்டுமென்று விதி இருக்கிறது. அப்படியிருக்கும்போது பத்திரிகை நிருபர்களை அழைத்து—இங்கே சொல் லாமல்—கருத்துக்களை வெளியிட இருப்பது முறையா ? அது இந்த சபைக்கு காட்டும் மரியாதையாகுமா ? என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தை நாளைக்கு எடுத்துக்கொள்ளலாம் என்று மக்கள்—நல் வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் மாண்புமிகு பேரவைத் தலைவரிடம் சொல்லியிருக்கிறார்கள் என்று கருதுகிறேன். இன்றைக்கு அவர் பத்திரிகை நிருபர்களுக்கு அதுபற்றி இண்டர்வ்யூ கொடுக்கிறாரா இல்லையா என்பது ஹைபதடிகல் க்வெஸ்டின் அதைப்பற்றி நாம் முடிவு கூறுவது நல்லதல்ல.

5. 1975-76 ஆம் ஆண்டுக்கான நிதிக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு—தொடர்ச்சி.

THIRU K. M. SUBRAMANIAM : On a point of personal explanation, Sir. (Interruption) No, no. I will finish. Because my name has been dragged, I will explain. We have voted for the abolition of races